


ரம்ஸி யூசுஃப். அவன்தான் எட்டிப்பார்த்தது. ஜன்னலைத் திறப்பதற்கு முன்னமே அவனுக்கு விபரீதம் தெரிந்துவிட்டது.

தலையில் அடித்துக்கொண்டு தன் சகாவைப் பார்த்தான். ஏதோ ஒரு ரசாயன திரவம் அடங்கிய பாட்டிலை, சும்மா ஊறுகாய் பாட்டிலைத் திறந்து முகர்ந்து பார்ப்பதுபோல அவன் பார்த்ததில் ஆரம்பித்தது வினை.

கப்பென்று மூக்கு வழியே போய் தொண்டை, அடி வயிறுவரை காரமும் நெடியும் தாக்கியதில் அப்துல் ஹக்கீம் முராத் கொஞ்சம் நிலைகுலைந்து போய்விட்டான். கையில் இருந்த பாட்டில் நழுவிக் கீழே விழ, அது உடைந்து, வேதிப்பொருள் தன் வேலையைக் காட்ட ஆரம்பித்துவிட்டது. தீதான்; வேறென்ன?
தீயை அணைக்க அந்தக் கணம் அவனுக்குத் தண்ணீர் தான் ஒரே உபாயமாகத் தோன்றியது. படித்தவன் தான்; வெடிகுண்டு தயாரிக்கப் பயன்படும் ரசாயனங்கள் எத்தகையவை, தண்ணீருக்கும் அவற்றுக்கும் எப்பேர்ப்பட்ட பங்காளி உறவு என்பதெல்லாம் நன்கு தெரிந்தவன் தான். ஆனாலும் அவனது எமோஷனல் இண்டலிஜென்ஸ் அந்தக் கணத்தில் வேலை செய்யாமல் மக்கர் செய்துவிட்டபடியால், தண்ணீரை ஊற்றித் தீயை அணைக்க முயன்றான்.

அதுவும் எப்படி? சிங்க்கைத் திறந்து, குழாயிலிருந்து வரும் நீரை விரலால் பாதி அடைத்து, வேகமாகப் பீய்ச்சி அடித்தான். அவ்வளவுதான். தீ, ஜகஜ்ஜோதியாக அந்த ஃப்ளாட் முழுவதற்கும் பரவ ஆரம்பித்துவிட்டது. தலையில் அடித்துக்கொண்டு கோணி, சுருணை என்று கிடைத்ததையெல்லாம் போட்டுத் தீயை அணைக்கப் பார்த்திருக்கிறார்கள். அணைந்தும் அணையாத பாதித் தீ புகையாக மேலெழும்பி, சந்துபொந்துகளில் நுழைந்து வெளியே கசிந்துவிட்டது.

துர்நாற்றம். ஆபத்து. போலீஸ். மாட்டிக்கொண்டார்கள்.

சரி, இதற்குமேல் யோசிக்க ஒன்றுமில்லை என்று யூசுஃப் முடிவு செய்தான். ஜன்னலைத் திறந்து, யாரும் மேலே வர முயற்சி செய்யவேண்டாம் என்று எச்சரித்தான். உடனே ஜன்னலை மீண்டும் அடைத்துவிட்டு, அப்பார்ட்மெண்ட்டின் பின்புற ஜன்னலை மோதி உடைத்து பைப்பைப் பிடித்துக்கொண்டு சரசரவென்று இறங்கினான்.

அவனது பேய் வேகத்தையும், வெளியே போலீஸ் வந்துவிட்டதையும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டிருந்த முராத், தானும் தப்பிக்க வேண்டும் என்பதை ஒரே ஒரு கணம் மறந்துபோனான்.

காவல் துறையினருக்கு அந்த ஒரு வினாடி போதுமானதாக இருந்தது. அப்பார்ட்மெண்ட்டின் கதவை உடைத்துத் திறந்து, பாய்ந்து அவனை அமுக்கிவிட்டார்கள்.

“என்னை ஒன்றும் செய்யாதீர்கள். எனக்கு எதுவும் தெரியாது. நான் ஒரு பைலட். என் நண்பன் ஒருவனைத் தேடி வந்தேன். அட்ரஸ் மாறிவிட்டது. இங்கே இந்த தீவிபத்தில் சிக்கிக்கொண்டேன்” என்று அலறினான்.

“உன் பெயர் என்ன?” என்றனர் காவல் துறையினர்.

எந்த பாஸ்போர்ட்டிலும் இடம்பெறாத அகமது சயீத் என்கிற பெயரைச் சொன்னான். மேற்கொண்டு சில வினாடிகள் காவல் துறையினர் விசாரித்திருப்பார்கள். ஒரு சிறு அவகாசம் கிடைக்க, முராத் சடாரென்று பால்கனிக்கு வெளியே பாய்ந்து தப்பிக்க ஒரு முயற்சி செய்தான்.

முடியவில்லை. பிடித்துவிட்டார்கள். சரி, இவனை ஸ்டேஷனுக்கு எடுத்துப் போய் விசாரித்துக்கொள்ளலாம் என்று ஒரு வேனில் அடைத்து, காவலுக்கு இரண்டு ஆள் போட்டு முதலில் அனுப்பிவைத்தார்கள். பிறகு கொஞ்ச நேரம் போராடி, தீயை அணைத்துவிட்டு, அறையில் என்னென்ன இருக்கிறது என்று ஆராய ஆரம்பித்தார்கள்.

மணிலாவின் வீதிகளை விளக்கும் ஒரு பெரிய வரைபடம். போப்பாண்டவர் வரும் சாலை வழியை அம்புக்குறியிட்டுக் காட்டும் இன்னொரு படம். ஒரு பைபிள் பிரதி. ஒரு பாதிரியார் அங்கி. இன்னொரு பக்கம் நிறைய ரசாயனக் குடுவைகள். ஒரு தோஷிபா லேப்டாப்.

இவை அனைத்தையும் ஒரு நேர்க்கோட்டில் வைத்து அவர்கள் யோசிக்கத் தொடங்கியபோது, அந்த அப்பார்ட்மெண்ட்டில் இருந்த தொலைபேசி ஒலித்தது. எடுத்தார்கள்.

“அலோவ், நீங்க ஆர்டர் குடுத்த அங்கிய தச்சிமுடிச்சாச்சிங்க. வந்தீங்கன்னா போட்டுப் பார்த்துடலாம். பொதுவா பாதிரிமாருங்க எங்களமாதிரி ரோட்டோர டைலருங்ககிட்டல்லாம் துணி தைக்கக் குடுக்கமாட்டாங்க. திருச்சபைலயே அதுக்கெல்லாம் ஆளுங்க இருப்பாங்க. உங்கள மாதிரி நாலஞ்சு பேர் இருந்தாத்தாங்க நம்ம பொழப்பும் ஓடும்!” என்று எதிர்முனை பேசியதும் காவல் அதிகாரிகளுக்கு விஷயம் புரிந்துவிட்டது.

பாதிரியார் அங்கி, போப்பாண்டவர் செல்லும் பாதையின் வரைபடம், மணிலா நகர மேப், தவிரவும் ரசாயனக் குடுவைகள்.

எப்பேர்ப்பட்ட படுகொலைத் திட்டம்! கூப்பிடு அந்த அகமது சயீதை என்று சுறுசுறுப்பானார்கள்.

மறுபுறம் இரண்டு காவல் அதிகாரிகளுடன் காவல் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட அகமது சயீது என்கிற முராத், வழியில் இன்னொரு முயற்சியாக அதிகாரிகளை வளைக்கப் பார்த்தான்.

“இதோ பாருங்கள். உங்களுக்கு ஒரு லட்சத்துப் பத்தாயிரம் பெசோக்கள் (கிட்டத்தட்ட இரண்டாயிரம் அமெரிக்க டாலர்கள்) தருகிறேன். இப்படியே என்னைத் தப்பிப்போக விட்டுவிடுங்கள்” என்று கேட்டுப்பார்த்தான்.

அவன் தப்பித்து ஓடமுடியாதபடி மர்ம உறுப்புக்குப் பக்கமாகப் பார்த்து, பலமாக நாலு

சாத்து சாத்திப் படுக்கவைத்துவிட்டார்கள் அதிகாரிகள்.

அதன்பிறகு அவனிடம் விசாரணை ஆரம்பமானது. முதலில் சில நாட்கள் ஒரு வார்த்தை கூடப் பேசாமல் கழித்தான். போரடித்துப் போன அதிகாரிகள், வன்முறை பிரயோகித்தால் ஒழிய இவன் வாய் திறக்கமாட்டான் என்று முடிவு செய்து, அவனைத் தனியே ஓர் இருட்டு செல்லுக்குத் தள்ளிக்கொண்டு போய்த் தங்க வைத்தார்கள். 'அறுபத்து ஏழு நாள் நரகம்' என்று பிலிப்பைன்ஸ் காவல் அதிகாரிகளே பிறகு வருணித்த அந்தச் சித்திரவதைக் காண்டம் விவரிக்கவே முடியாதது.

ஒரு நாள் தவறாமல் முராத்தை உட்காரவைத்து, அவன் மூச்சுமுட்டும் அளவுக்கு வாய் வழியே தண்ணீரை உள்ளே செலுத்திக்கொண்டே இருந்தார்கள். வேறு உணவே கிடையாது. வெறும் தண்ணீர். அதுவும் பைப் வைத்துப் பீய்ச்சி அடித்துக்கொண்டே இருப்பார்கள். மூச்சுவிடக்கூட அவகாசம் தரப்படமாட்டாது.

இது முடிந்ததும் அவனது பிறப்பு உறுப்பில் சிகரெட்டை வைத்துப் புள்ளிக்கோலம் போட ஆரம்பிப்பார்கள். ஒரு நாளைக்கு முப்பது அலறல் என்பது கணக்கு. ஒரு கட்டத்தில் இனிமேல் அங்கே சுடுவதற்கே இடமில்லை என்னும் அளவுக்கு முற்றிலும் தீயினால் சுடப்பட்டுவிட்டது.

பிறகு புராதன தாக்குதல் முறை. உருட்டுக் கட்டையால் இடைவிடாமல் அடித்துக்கொண்டே இருப்பது. மேலே காயமே தெரியாது. ஆனால் உள்ளுக்குள் எலும்புகளெல்லாம் கழண்டுபோய்விடும். ரத்தம் கட்டிக்கொண்டு அங்குலம் கூட அசைக்கமுடியாது.

இந்த மூன்று விதமான சித்திரவதைகளை ஒரே சமயத்தில் அடுத்தடுத்துச் செய்வதை பிலிப்பைன்ஸ் காவல் துறையினர் "Tactical Interrogation" என்று சொல்வார்கள். இதற்கு மடங்காத குற்றவாளியே இருக்கமுடியாது என்பது அவர்களுடைய சித்தாந்தம்.

இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குள்ளாகவே குற்றவாளிகள் பேச ஆரம்பித்துவிடுவார்கள். ஆனால் முராத் மொத்தம் அறுபத்தேழு நாள் இந்தச் சித்திரவதைகளைச் சகித்துக்கொண்டிருந்திருக்கிறான்! 'அவன் இறந்துபோகாதது ஆச்சரியம்தான்' என்று பின்னால் விசாரணை அதிகாரிகளே சர்டிபிகேட் கொடுத்தார்கள் என்றால் பார்த்துக்கொள்ளுங்கள்.

ஒருவழியாக அறுபத்தெட்டாவது நாள் அவன் வாய் திறந்தான். "என் வாழ்வில் நான் செய்ய இருந்த தலைசிறந்த காரியம் இது. இது மட்டும் நடந்திருந்தால் ஒட்டுமொத்த அமெரிக்காவும் வெலவெலத்துப் போயிருக்கும். அந்த ரசாயனச் சனியன் மட்டும் கொட்டி, குட்டையைக் குழப்பாதிருந்திருந்தால் உங்களால் ஒருபோதும் ரம்ஸி யூசூஃபின் நவீன வெடிகுண்டைக் கண்டுபிடித்து அழித்திருக்கவே முடியாது. எக்ஸ்ரே கதிர்கள் கூட ஊடுருவிக் கண்டுபிடிக்க முடியாத கட்டுமானம் அது" என்றெல்லாம் தன் வாக்குமூலத்தில் முராத் பேசியிருக்கிறான்.

ஒரு பக்கம் முராத் இப்படித் திருவாய் மலர்ந்துகொண்டிருக்க, மறுபுறம் அப்பார்ட்மெண்ட்டில் கண்டு எடுக்கப்பட்ட ரம்ஸி யூசூஃபின் லேப்டாப் மற்றும் நாலைந்து ஃப்ளாப்பி டிஸ்குகளிலிருந்து காவல் அதிகாரிகள் ஏகப்பட்ட தங்கச் சுரங்கங்களைக் கண்டுபிடித்தார்கள்.

யூசுஃபுக்கு கம்ப்யூட்டர் பயன்பாட்டில் உள்ள பல நுணுக்கமான சூட்சுமங்கள் தெரிந்திருந்தன. அவன் சாதாரணமாக நோட்ஸ் எழுதி சேகரிக்கும் ஃபைல்களைக் கூட என்கிரிப்ட் செய்தே வைத்திருந்தான். வேர்ட் டாக்குமெண்டுகள், எக்ஸெல் ஃபைல்கள் எல்லாவற்றுக்கும் பாஸ்வேர்ட் பாதுகாப்பு அளித்திருந்தான். அந்த பாஸ்வேர்ட்களையெல்லாம் இன்னொரு ஃபைலில் எழுதி அதற்கொரு பாஸ்வேர்ட் கொடுத்து யாரும் திறக்கமுடியாமல் செய்திருந்தான்.

நிபுணர்கள் வந்து அத்தனை ஏழு கடல், ஏழு மலைகளையும் தாண்டி அவனது லேப்டாப்பைக் குடைந்து, கடைந்து எடுத்தபோது, வியப்பில் வாய்பிளந்து போனார்கள். மணிலாவிலிருந்து புறப்படும் விமானங்களின் நேர அட்டவணை, குண்டுகள் வெடிக்கும் நேரங்கள், எந்த விமானத்தில் யார் குண்டுவைக்கப் போகிறார்கள் என்கிற விவரம், திட்டத்தில் யார் யார் எந்தெந்த வகைகளில் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் போன்ற தகவல்கள், சில முக்கியமான நபர்களின் புகைப்படங்கள் (அதில் ஒன்று முகம்மது ஜமால் காலிஃபா என்கிற அபூ பாராவின் புகைப்படம். ஆனால் இன்றுவரை வெளியிடப்பட்டதில்லை.) செலவுக்கணக்குகள், யார் யாரிடம் இருந்து எத்தனை பணம் வந்திருக்கிறது என்கிற விவரங்கள் என்று ஃபைல்கள் நீண்டுகொண்டே போயின.

அமெரிக்க, இஸ்ரேல் மற்றும் பிலிப்பைன்ஸ் அரசுகளுக்கு எச்சரிக்கை விடுக்கும் சில அறிக்கைகளையும் அவன் எழுதி வைத்திருந்தான். காலீத் ஷேக் முகம்மது, முகம்மது அட்டா, அபூ பாரா என்கிற பெயர்கள் சர்வ சாதாரணமாகக் கையாளப்பட்டிருப்பதைக் கண்டு, காவல் அதிகாரிகள் வெலவெலத்துப் போனார்கள்.
எப்பேர்ப்பட்ட சதித்திட்டம்! எவ்வளவு பெரிய இயக்கம் சம்பந்தப்பட்டிருக்கிறது!

உடனடியாகச் சம்பந்தப்பட்ட அத்தனை பேரையும் பிடிக்கும் பணியில் மும்முரமானது பிலிப்பைன்ஸ் காவல் துறை. உளவுத்துறை அதிகாரிகள் தலைதெறிக்க ஓடினார்கள். இண்டர்போல் மூலம் சகல ஆசிய நாடுகளுக்கும் தகவல் அனுப்பப்பட்டது. சி.ஐ.ஏ., மொசாட் என்று அமெரிக்க, இஸ்ரேலிய உளவு அமைப்புகள் பிலிப்பைன்ஸ் காவல்துறைக்கு உதவ முன்வந்தன.

முராத் பிடிபட்டதை அடுத்து ஜனவரி 11_ம் தேதி சிங்கப்பூரில் பதுங்கியிருந்த வாலிகான் அமீன் ஷா என்கிற தீவிரவாதி, சிங்கப்பூர் காவல் துறையினரால் கைதுசெய்யப்பட்டான். வேறு இரண்டு நபர்களை மலேசியாவிலும் பாங்காக்கிலும் வளைத்துப் பிடித்தார்கள். பிலிப்பைன்ஸிலிருந்து தப்பித்து சிங்கப்பூர் போன ரம்ஸி யூசுஃப், சில தினங்கள் அங்கே பதுங்கியிருந்தான். எப்படியும் முராத் உளறிவிடுவான் என்பது உறுதியானதும் அங்கிருந்து புறப்பட்டு மாற்றுப் பெயரில் பாகிஸ்தானுக்குப் பறந்துவிட்டான்.

கராச்சி. அவனுக்குப் பழக்கமான நகரம். இஸ்லாமாபாத்தும் பாதுகாப்பான இடம்தான். நண்பர்கள் இருக்கிறார்கள். உதவி செய்ய எத்தனையோ நல்ல உள்ளங்கள் இருக்கின்றன. எல்லாவற்றுக்கும் மேலாக முன்னதாகத் தப்பித்து வந்திருக்கும் மாண்புமிகு மாமா காலீத் ஷேக் முகம்மது இருக்கிறார். எப்படியும் தன் உயிருக்கு ஆபத்து இருக்காது என்று அவன் உறுதியாக நம்பித்தான் பாகிஸ்தானில் வந்து இறங்கினான்.
ஆனால் பாங்காக்கில், பாதி வழியில் பாதை பிரிந்த அந்த ஆப்பிரிக்க முஸ்லிம் நண்பன் பார்க்கர், அங்கே இரண்டு லட்சம் டாலருக்கு ஆசைப்பட்டுத் தன்னைக் காட்டிக்கொடுக்கத் தயாராகக் காத்திருப்பான் என்பது மட்டும் அவனுக்குத் தெரியாமல் போய்விட்டது.

பிப்ரவரி 7, 1995 அன்று ரம்ஸி யூசுஃப் இஸ்லாமாபாத்தில் உள்ள ஒரு ஹோட்டல் அறையில் வைத்துக் கைது செய்யப்பட்டான்.

ஆப்பரேஷன் போஜிங்காவுக்கு அத்துடன் மங்களம் பாடிவிட்டார்கள்.